நம் ஊர்களில் மூன்று முறை ஆலய மணி ஒலிப்பது இப்போதுள்ள தலைமுறையினர் எதற்கென்றே தெரியாமல் போய்விடும் சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்காக முக்காலத்தை நினைவுபடுத்தும் விதமாக தாய்த் திருச்சபையின் முக்கிய ஜெபங்களில் ஒன்றான **மூவேளை ஜெபத்தினை** நமக்கு நினைவுபடுத்துவது சிறந்ததாக இருக்கும் எனக்கருதி, இதோ நம் எல்லோருக்காகவும்.

## மூவேளைச் செபம்

**ஆண்டவருடைய தூதர் மரியாளுக்கு தூதுரைத்தார்**
**அவளும் பரிசுத்த ஆவியினால் கருத்தரித்தார் – அருள் நிறை**

**இதோ ஆண்டவருடைய அடிமை**
**உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும் – அருள் நிறை**

**வார்த்தை மனுவுருவானார்**
**நம்மிடையே குடிகொண்டார் – அருள் நிறை**

**இயேசுகிறிஸ்துநாதருடைய வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாகும்படியாக இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**செபிப்போமாக**

**இறைவா ! தேவ தூதர் அறிவித்தபடியே உம்முடைய திருமகன் இயேசுகிறிஸ்து மனிதனானதை நாங்கள் அறிந்துள்ளோம். அவருடைய பாடுகளினாலும், சிலுவையினாலும் நாங்கள் அவருடைய உயிர்ப்பின் மேன்மையை அடையும் பொருட்டு எங்கள் உள்ளங்களில் உமது அருளைப் பொழிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய அதே இயேசுகிறிஸ்துவழியாக மன்றாடுகிறோம் – ஆமென்.**